உ
சிவமயம்



யாழ்ப்பாணம், உடுவில் தெற்கு
யாமாவைச் சேர்ந்த

# திருமதி அமிர்தம் அவர்கள்

சிவபத மெய்தியமை குறித்து

ஆற்றிய

# நினைவு மலர்

தொகுத்தவர்:

திரு. ம. நவசிவாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி அமிர்தம் அவர்கள்



தோற்றம் : 1908

மறைவு : 23 - 10 - 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமதி அமிர்தம் அவர்களின் குடும்ப வரலாறு-

யாழ்ப்பாணம், உடுவிலில் 1908-ம் ஆண்டு திரு. சபாபதி தம்பதிகளின் 4-வது குமாரத்தியாகப் பிறந்து உடுவில் தெற்கு, யாமாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சின்னையா நாகலிங்கம் அவர்களை கணவனாக அடைந்து. சீவரத்தினம், செல்வராசா, தம்பித்துரை ஆகிய மூன்று புதல்வர்களுக்கும், இராசலட்சுமி, இராஜேஸ்வரி எனும் இரு புதல்விகளுக்கும் அன்னையாகி, 65 வருடங்கள் இப் பூவுலகில் பெருமையுடன் வாழ்ந்து, 1973-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5 மணி யளவில் இவ்வுலக வாழ்வை நீத்து, இறைவன் திருவடி நிழலை அடைந்து விட்டார்கள்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் கழல் இறைஞ்சி நிற்போமாக.

**பேரமக்கள்**

சீவரத்திதினம் — ஆனந்தராணி
இரத்தினரூபி.

இராசலிங்கம் — இராசலட்சுமி
சரோஜா தேவி, இரகுநாதன், சந்திய தேவி,
குகநாதன், சகிலா தேவி,

தம்பித்துரை — விக்கினேஸ்வரி
ஸ்ரீ பாஸ்கரன், மஞ்சுளா, மைதிலி.

இராசதுரை — இராஜேஸ்வரி
முரளீதரன், கலைவாணி, கலைச்செல்வி, கலைமதி.

யாமாச் சந்தி,
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஒளவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்

---

## நிலமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத்து அங்குச நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை அறுத்து
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாடமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்குமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பா லுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக ! விரைகழல் சரணே.

(திருச்சிற்றம்பலம்)

# பிள்ளையார் சிந்தனை

திருச்சிற்றம்பலம்

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜயஜய
சீரிய ஆனைக் கன்றே ஜயஜய
அன்புடை அமரர்கட் காப்பாய் ஜயஜய
ஆவித் துணையே கணபதி ஜயஜய
இண்டைச் சடைமுடி இறைவா ஜயஜய
ஈசன் தந்தருள் மகனே ஜயஜய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிய கருமம் முடிப்பாய் ஜயஜய
ஊர்நவ சந்தி உகந்தாய் ஜயஜய
எம்பெரு மானே இறைவா ஜயஜய
ஏழுல கந்தொழ நின்றாய் ஜயஜய
ஐயா கணபதி நம்பியே ஜயஜய
ஒன்றுடை மருப்புடை வித்தகா ஜயஜய
ஓங்கிய ஆனைக் கன்றே ஜயஜய
ஔவிய மில்லா அருளே ஜயஜய
அக்கர வத்து வானவா ஜயஜய
கணபதி என்வினை களைவாய் ஜயஜய
ஙப்போல் மழுவொன் றேந்தியே ஜயஜய
சங்கரன் மகனே சதுரா ஜயஜய
ஞயநம் பினர்பால் ஆடியே ஜயஜய
இடம்படு விக்கின விநாயகா ஜயஜய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜயஜய
தத்துவ மறைதெரி வித்தகா ஜயஜய
நன்னெறி விக்கின விநாயகா ஜயஜய
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் ஜயஜய
மன்றுள் ஆடும் மணியே ஜயஜய
இயங்கிய ஞானக் குன்றே ஜயஜய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜயஜய
இலகக் கொம்பொன் றேந்தியே ஜயஜய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜயஜய
அழகிய ஆனைக் கன்றே ஜயஜய
இளமத யானை முகத்தாய் ஜயஜய
இறருபதி விக்கின விநாயக ஜயஜய
அனந்தலோ டாதியின் அடிதொழ அருளே.

—ஔவையார்

வாக்குண்டாம்; நல்ல மனமுண்டாம்; மாமலரான்
நோக்குண்டாம்; மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

—மூதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா. —நல்வழி

(திருச்சிற்றம்பலம்)

---

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறைத் திரட்டு

---

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரம்

### முதலாந் திருமுறை

திருவலிவலம் பண்: வியாழக்குறிஞ்சி
இராகம்: சௌராட்டினம் தாளம்: ஆதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை யிறையே.

திருவலிவலம் பண்: பழந்தக்கராகம்
இராகம்: ஆரபி தாளம்: திரிபுடை

ஒல்லையாறி உள்ளம்ஒன்றிக் கள்ளம்ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றன்நாமம் நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலம்மே யவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாந் திருமுறை

திருப்புள்ளிருக்குவேளூர் பண்; சீகாமரம்
இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: திரிபுடை

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

## மூன்றாந் திருமுறை

திருவாவடுதுறை பண்: காந்தாரபஞ்சமம்
இராகம்: கேதாரகௌளை தாளம்: ஆதி

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

திருக்கழுமலம் பண்: கொல்லி
இராகம்: கேதாரம் தாளம்: மிஸ்ரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்செங்காட்டங்குடி பண்: பஞ்சமம்
இராகம்: சௌராட்டினம் தாளம்: சம்பை

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

### ஏழாந் திருமுறை

திருப்புன்கூர் — பண்: தக்கேசி
இராகம்: காம்போதி — தாளம்; திரிபுடை

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமு ழாமுழக் கஅருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

## நமச்சிவாயத் திருப்பதிகம்

### திருஞானசம்பந்தர்

காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொனார் திலகம் முலகுக் கெலாம்
நம்பன் நாம நமச்சி வாயவே.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்
தக்கு மாலை கொடங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்த குவிப்பது
நக்கன் நாம நமச்சி வாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோத வல்லார்தமை நண்ணினுல்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாம நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே.

மந்தரம் மனபா வங்கள் மேவிய
பந்தனை யவர்தா மும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவியே புகுவித் திடுமென் பரால்
வரதன் நாம நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால் விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பதால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சி வாயவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லா ரெலாம்
பந்த பாச மறுக்க வல்லார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் நீக்கிச் சகலகாரிய சித்திதரும்

# திருநள்ளாற்றுத் திருப்பதிகம்

## திருஞானசம்பந்தர்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்-
னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலு
டையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கடலுட் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே.

ஆன்முறையால் ஆற்ற வெண்ணீறணிந்தணி யிமையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றியகை
நான்மறையா னம்பெருமான் மேயது நள்ளாறே.

புல்கவல்ல வார்சடைமேல் பூம்புனல்பெய் தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோர்டுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநிழற் சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே.

ஏறுதாங்கி ஊர்திபேணி ஏர்கொளிள மதியம்
ஆறுதாங்கும் சேன்னிமேலோர் ஆடரவம் சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில்நிரை கொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களுச்சி மேல்விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி எம்மிறைவன் என்றடியே இறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்கும் தன்அடியார்கட் கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே.

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண்கொள் முழவதிர
வஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவ தன்றியும்
போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித் திகழ்தரு கண்டத்
துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத்தீ யம்பினல்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீறு ஆடுவதன்றியும்
போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பான்மதியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே.

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுடனே ஒடுக்கி
அண்ணலாகா வண்ணல் நீழலாரழல் போலுருவ
மெண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே.

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறி செல்-
லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிலும் முடனே
நாசம்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தன் நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்புநீங்கி வானவரோடு உலகில் உறைவாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## திருப்பெருந்துறையில் அருளிய

## அடைக்கலப்பத்து

திருச்சிற்றம்பலம்

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமை
யினுற்
பொறுப்பவனே அராப்பூண் பவனேபொங்கு கங்கை
சடைச்
செறுப்பவனேநின் திருவரு ளால்என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

பெரும்பெருமான் என்பிறவியை வேரறுத்துப் பெரும்
பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன்நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய் அடியேன்உன் அடைக்
கலமே.

வழங்குகின் ருய்க்குன் அருளாய் அமுதத்தை வாரிக்
கொண்டு,
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன் என் விதி
யின்மையால்,
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத் தந்துய்யக்
கொள்ளாய்,
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன்உன் அடைக்
கலமே.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில்தூகேன் மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமில் இத்தனிய னேற்கே.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல்
கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

ஏசினும் யானுன்னை ஏத்தினும் என்பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதிகண்டாய் செம்பவள வெற்பின்
தேசுடையாய் என்னை ஆளுடையாய் சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண்டாய் அமுதுண்ணக் கடையவனே.

விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சப்பெரும்
புலையனேனை உன்கோயில் வாயிலிற்
பிச்சனுக்கினுய் பெரிய அன்பருக்கு
உரியனுக்கினுய் தாம்வளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடையநாதனே.

விண்ணுளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணுளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றுனைத்
தண்ணர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணுளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணுமலையானைப் பாடுதுங்காண் அம்மானுய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயனே மறிகடல் விடமுண்டு
வானவா மணிகண்டத்தெம் அமுதே!
நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சிவாய என்று உன்அடிபணியாப்
பேயனாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகுலாம் சடைப் பிஞ்ஞகனேயோ
சேயனாகிநின்று அலறுவது அழகோ
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

திருச்சிற்றம்பலம்

---

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத்தானந்தக் கனியே
யம்பல மாட ரங்காக
வெளிவளர் தெய்வக்கூத் துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்று
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூய நற்சோதியுட் சோதீ
யடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறணி பவளக்குன்றமே நின்ற
    நெற்றிக் கண்ணுடைய தோர்நெ ருப்பே
வேறணி புவன போகமே யோக
    வெள்ளமே மேரு வில்வீரா
வாறணி சடையெம் மற்புதக் கூத்தா
    வம்பொன் செயம் பலத்தரசே
யேறணி கொடியெம் மீசனே யுன்னைத்
    தொண்டனே னிசையுமா றிசையே.

தனதனற் றோழா சங்கரா சூல
    பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
    கண்கண் மூன்றுடைய தோர்கரும்பே
யனகனே குமார விநாயகசனக
    வம்பலத் தமர் சேகரனே
யுனகழ லிணையென் னெஞ்சி னுளினிதாத்
    தொண்டனே னுகரு மாறுகரே.

---

# திருப்பல்லாண்டு

இராகம்: சௌராட்டினம் பண்: பஞ்சமம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
    தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
    சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு வில்விடங்கன்
    விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தை எந்தாய் சுற்றமுற்றும் எமக்கமுதாம்
எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர் அடியார்
அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியாப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே.

மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டுகூறுதுமே.

—சேந்தனர்

# திருப்புராணம்

கொண்டுவந்து மனைப்புகுந்து
குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலி னாதனத்திடை
வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு
சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையில்
அமுதுசெய்ய அளித்துளார்.

மண்ணினிற் பிறந்தார்
பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்
தமையமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல்
விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனின் உலகர்முன்
வருகென உரைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிய மாடுநீடு
செல்வமுந் தில்லைமன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன வாகுமென்று
நாடிய மனத்தினோடு
நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சிபொங்கக்
குறைவறக் கொடுத்துவந்தார்.

தூயதிருவமுது கனி
கன்னலறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பாலினிய
பண்ணியமுண் ணீரமுத
மேயபடி யாலமுது
செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருமிவர்
பான் மனமகிழ்ந்தார்.

—சேக்கிழார் சுவாமிகள்.

# திருப்புகழ்

எருவாய் கருவாய் தனிலே
உருவாய் இதுவே பயிராய் விளைவாகி
இவர்போய் அவராய் அவர்போய்
இவராய் இதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதாய் இருதாய் பலகோ டியதாய்
உடனே அவமாய் அழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமேல் இருதாள் புனைவோனே
முனிவோர் அமரோர் முறையோ வெனவே
முதுசூர் உரமேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சேர் அழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிய பெரிய எருமை கடவு
கடிய கொடிய திரிசூலன்
கறுவி இறுக கயிறோ டுயிர்கள்
கழிய முடுகி எழுகாலம்
திரியு நரியும் எரியும் உரிமை
தெரிய விரவி அணுகாதே
செறிவும் அறிவும் உறவும் அனைய
திகழும் அடிகள் தரவேணும்
பரிய வரையின் அரிவை மருவு
பரமர் அருளும் குருகோனே
பழன உழவர் கொழுவில் எழுது
பழய பழநி அமர்வோனே
அரியும் அயனும் வெருவ அரிய
கிரியை உருவ எறிவோனே
அயிலும் இயலும் அறமும் நிறமும்
அழகும் உடைய பெருமாளே.

குடிவாழ்க்கை அன்னை மனையாட்டி பிள்ளை
குயில்போற்ப்ர சன்ன மொழியார்கள்
குலம்வாய்த்த நல்ல தனம்வாய்த்த தென்ன
குருவார்த்தை தன்னை உணராதே
இடநாட்கள் வெய்ய நமனீட்டி தெய்ய
இடர்கூட்ட இன்னல் கொடுபோகி
இடுகாட்டில் என்னை எரியூட்டு முன்னுன்
இருதாட்கள் தம்மை உணர்வேனோ
வடநாட்டில் வெள்ளி மலைகாத்து புள்ளி
மயிலூர்க்க வல்ல குமரேசா
வடிவாட்டி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலைகாத்த நல்ல மணவாளா
அடிநாட்கள் செய்த பிழைநீக்கி என்னை
அருள்போற்றும் வண்ணம் தருவாழ்வே
அடிபோற்றி அல்லி முடிசூட்டி வல்ல
அடியோர்க்கு நல்ல பெருமாளே.

நாடித் தேடித் தொழுவார் பால்
நானத் தாகத் திரிவேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடக் கூடற் பதிஞான
வாழ்வைச் சேரத் தருவாயே
பாடக் காதற் புரிவோர்க்குப்
பாதத் தேனைத் தருவோனே
ஆடற் றோகைக் கினியோனே
ஆனைக் காவிற் பெருமாளே.
—அருணகிரிநாதர்

# நல்லூரான் திருவடி

## (ஸ்ரீ யோகர் சுவாமிகள்)


நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி — கிளியே ;
இரவுபகல் காணேனெடி.
ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி — கிளியே !
நல்லூரான் தஞ்சமெடி.
தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி — கிளியே !
கவலையெல்லாம் போகுமெடி.
எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கத்தன் திருவடிகள் — கிளியே !
காவல் அறிந்திடெடி.
பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி — கிளியே !
ஆறுமுகன் தஞ்சமெடி.
சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியில் சொன்னேனெடி — கிளியே !
பொல்லாங்கு தீருமெடி.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம் : 15-9-1909

மறைவு : 23-10-1973

# திருமதி. அமுதம் நாகலிங்கம்

அவர்கள்

தேகவியோகங் குறித்த

## இரங்கற் பாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமதி அமுதம் நாகலிங்கம் அவர்கள் தேகவியோகங் குறித்த

# இரங்கற் பாக்கள்

### வெண்பா

ஆண்டுபிர மாதீசம் ஆனதோர் கார்த்திகையிற்
பூண்ட துவாதசிப் பூர்வதிதி — காண்டரிய
அமுதமெனும் நல்லாளை அரனார்தன் திருவடிக்கீழ்
தமதாக்கிக் கொண்ட தினம்.

### அகவல்

பாரிய அலையால் பகலு மிரவும்
பேரொலி செய்யுமா ஆழி சூழ்ந்த
ஈழ மணித்திரு நாட்டின் வடபால்
திகழும் யாழ்ப்பாணம் வளைகுடா சூழ்ந்தது
ஆங்கது தன்னில் அருமை பெருமையாம்
பாங்கு பலபெற்ற உடுவிலம் பதியில்
ஏர்முனை நாடிய சீர்பெறு வேளாம்
குடியதிற் பிறந்த சபாபதிப் பெரியோன்
அக்குலத் துதித்த அரிவை பொன்னம்
மாவைக் கடிமணம் புரிந்து இல்லறம்
பேணுங் காலை பெற்றதோர் பெற்றியிற்
குற்றம தின்றிவந் துதித்தனள் அமுதம்
அருந்தவப் பேருய்ப் பெரும்புவி பிறந்த
மருந்தினும் நல்ல அமுதம் தன்னை
கட்டிலாக் காதல் காட்டியே பெற்றோர்
மட்டிலா மகிழ்ச்சியில் மலர்ந்து வளர்த்துப்
பருவமடைந் ததும் பண்புபல கொண்ட
நாக லிங்கப் பெரியோன் தன்னை
கற்றவ ரவையிற் கடிமணம் சேர்த்தனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவர் உவந்தனர் உலகோர் ஏத்தினர்
கட்டிளங் காளையும் கன்னி யாழதமும்
பெட்புறு வாழ்க்கையிற் பிணைந்து சுகித்தும்.
இன்ப மென்னும் இருங் கடல் குளித்தும்,
அன்பு என்னும் ஆழ்கடல் குளித்தும்,
இல்லற மென்னும் நல்லறம் பேணியும்
உற்று ருறவினர் மற்றோ ரெல்லாம்
என்னே இவர்கள் இல்லறச் சிறப்பு
என்று போற்றி ஏத்தித் துதிக்கவும்
வாழ்வது கொண்டு வாழுங் காலை
"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறெ"ன வள்ளுவன்
வகுத்த வாய்மையால் வாழ்விற் கணவனொடு
காதல் இன்பம் கலந்து அணைந்து
மருதடி விநாயகன் தன்னடி அருளால்
காலால் பகுதியிற் கடமை யாற்றும்
சிவ ரத்தினச் செம்மல் தன்னையும்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை என்ற
பழுதறு வாக்கியம் பயனு யமையவே
குழந்தை யுள்ளம் கொண்ட செல்வ
ரத்தினம் என்னும் புத்திரன் தன்னையும்
துறைமுகக் கூட்டுத் தாபனந் தன்னில்
இறைமுறை தவறாது கடமை யதாற்றும்
தம்பித்துரை யெனும் சான்றோன் தன்னையும்
இராஜ லட்சுமி, இராஜேஸ் வரியாம்
அரிவைய ரிருவரைச் சுதுமலை அம்மாள்
திருவரு ளாலே சுகமுறப் பெற்றும்
ஐவரை இப்புவிக் கறிமுகஞ் செய்து
எத்தவ மியற்றிப் பெற்றன ளென்று
இத்தலத் துள்ளோர் ஏத்திப் புகழ்ந்திட
சீரிய பண்புகள் சிறந்தநற் குணங்கள்
நேரிய நோக்கு நிறைந்தநற் சிந்தனை
ஆதிய அனைத்தையும் தாய்முலைப் பாலொடு
சேர்த்துக் குழைத்துத் தந்தனை அமுதா! — உன்றன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாக வாழ்வு செப்பலு மரிதோ ?
கைம்மை நிலையிலு மன்னவர் தமக்கு
உய்யும் வகையில் நன்மரு மக்களைத்
தேடி எடுத்துச் சோடி சேர்த்தனை
முன்னவ னிராச லிங்கம் அன்னவன்
கண்ணே போற்றிக் கடமை செய்பவன்
யாழ்நகர் பிஸ்கால் அலுவ லகத்தில்.
இளைய மகளாம் இராஜேஸ் வரிக்கு
சிலோன் ரேடிங் கொப்பனி தன்னில்
சேவை செய்யும் இராஜ துரையை
வதுவை செய்து இறும்பூ தெய்தினய்
தியாக வாழ்வும் சீலமுங் கொண்ட
அன்ன பூரணத்தை அளித்தனை உன்றன்
தலைமகன் றனக்கு தன்னே ரில்லா
இளநகை அரும்பும் வடிவுடை வதனச்
சிலைநுதல் கொண்ட விக்னேஸ் வரியைப்
பிறையணி படர்சடைப் பெம்மா னருளால்,
தம்பித் துரைக்குத் தந்தனை அமுதா
அன்னவர் வாழ்வில் அரும்பிய மொட்டுகள்
சரோஜா தேவி சத்திய தேவி
சகிலா தேவி இரத்தின ரூபி
கலைமதி கலைச்செல்வி கலைவாணி. மைதிலி
மஞ்சுளம் ஆகிய மாண்புறு பேத்திகள்
இரகுநாதன் குகநாதன் பாஸ்கரன் முரளீ
தரனும் பேரன் மார்களும் மலர்ந்து
பூக்க ளாகிப் புதுமணம் பரப்பு
முன்னரே நீயும் மெய்ப் பொருளை நாடி
விண்ணகம் சென்றாய் மண்ணகத் துள்ள
புதல்வரும் மருகரும் புன்கணுற் றிரங்க
பேரன் பேத்தியர் பிஞ்சு உள்ளத்தினர்
அனலிடைப் பட்ட மெழுகென உருகக்
கடல்நேர் உறவினர் கலங்கி வீழ்ந்தலற
அருகில் உள்ள அயலவ ரெல்லாம்
கண்ணீர் விட்டே கதறிப் புலம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாதசி திதியில் தொல்கயிலைக் கிறை
பதத்திடை நாட்டம் பதிய மானுடச்
சட்டையை யகற்றி மறைந்தனை அந்தோ
அமுதா உன்னை ஆலமுண் டவன்
தன்னரு கிருத்த வேண்டினம் யாமே.

### மக்கள் புலம்பல்

பெற்றே வளர்த்தெம்மைப் பேரன்பு காட்டிப் பெருமையுடன்
கற்றோர் முன்வைத்த கற்பகமே! கற்கண்டே
மற்றோர் பிறப்புண்டேல் அப்பிறப்பிலுன் வயிற்றில்
சற்றே இடந் தருவாய் தாயே தயாநிதியே.

### மருமக்கள் புலம்பல்

பெற்றநற் றாயைப்போலப் பேணியே யெம்மை யென்றும்
குற்றமே காண்கிலாத குணப்பெருங் குன்றே எங்கள்
உற்ற ஆர் துணையினோடு உவகையாயிருக்கச் செய்த
கற்பக தருவே! உம்மைக் காண்பது எப்போ மாமி.

### பேரன், பேத்தியர் புலம்பல்

பாட்டி யிருக்கின்றாள் பாராட்டிச் சீராட்டி
ஊட்டி வளர்க்கவென்று உள்ளமெலாம் பூத்திருந்தோம்
நாட்டிலினி என்செய்வோம் நாதியற்றோமுன் மறைவால்
வாட்டி வதைகின்றோம் வகையறியோமிவ் வுலகில்.

### சுற்றத்தார் மனத்துயர்

தவங்கிடந்து பெற்றெடுத்த மக்களெல்லாம்
தணியாத சோகத்தால் மயங்கி வீழ
அவங்கிடக்கு மிப்பிறப்பை அறுத்து நீயும்
அரியயனும் காணவொணு மரணமெந்தை
சிவங்கலக்க வெண்ணினையோ அமுதா உன்னைத்
தினம் தினமுங் காணுது தேம்புகின்றோம்
பவங்கிடக்கும் மண்ணிலெமை அழவேவிட்டுப்
பறந்து விட்டாயிவ்வுலகம் பரிதவிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

ஐயனவன் படைத்திட்ட அவனிதன்னில்
அவதரித்தோ ரிறந்தவர்கள் கணக்கிலாமோ ?
மையலறு மண்ணகத்தில் விளைந்தவுடல்
மண்ணுக்கேயாம் மாற்றமிதில் ஏதுமுண்டோ ?
வையகத்தில் பிறப்புள்ளதேல் இறப்புமுண்டு
மாற்றரிய விதியிதுவென்றுணர்ந்து கொண்டு
மையலொரு பாகத்தன் பாதஞ்சேரத்
தவமியற்றுவோம் வாரீர் ஜெகத்துளீரே.

"புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்."

பா யாத்தவர்

திரு. செல்லத்துரை அவர்கள்
(ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நன்றி

எங்கள் அருமைத் தாயாரின் ஈமச் சடங்கின்போது, நேரிற் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும் எமது இதயபூர்வமான நன்றி.

இன்று வருகை தந்திருக்கும் உங்கள் எல்லோருக்கும் மனங்கனிந்த நன்றி.

வணக்கம்.

உடுவில்
22-11-73

தங்களன்புள்ள,
மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்ஜினி அச்சியந்திரசாலை
நிர். 97, மலே வீதி,
கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org